# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

**முறையீட்டு மனு எண்: 053/2017/பே**

**ஆணை எண்: 225/2017**

நாள்: 08-09-2017

திரு. டி. டைட்டஸ்,
15/114, டிரினிடி ஹவுஸ்,
எட்டக்கோடு,
வீயனூர் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்– 629 177.

— முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கிள்ளியூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

— எதிர் மனுதாரர்

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் பேரூராட்சியை சேர்ந்த திரு. டி. டைட்டஸ் என்பவரின் 10.03.2017–ம் நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2017 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.053/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. டி. டைட்டஸ், முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் பேரூராட்சி, RSY 113/17-ல் உள்ள தனது மூதாதையர் மூலமாக பெறப்பட்ட சொத்திற்கு குழித்துறை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தீர்ப்பின்படி தனது பெயருக்கு சொத்துவரி மாற்றம் செய்யாத பேரூராட்சி செயல் அலுவலர், கிள்ளியூர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் மேற்படி இடத்தில் உள்ள சொத்திற்கு தன் பெயரில்

சொத்து வரி விதித்து தரக் கோரியும் தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ எண்.053/2017/பே/நாள்:21.03.2017, 25.05.2017, மற்றும் 19.06.2017 ஆகிய தேதிகளில் முறையீட்டு மனுதாரரின் மனுவிற்கான விளக்கத்தினை அனுப்பிவைக்கக் கோரி, செயல் அலுவலர், கிள்ளியூர் பேரூராட்சி அவர்களுக்கு அறிவிப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது.

செயல் அலுவலர், கிள்ளியூர் பேரூராட்சி தனது கடித எண். 69/2017/ நாள்: 23.06.2017ம் தேதிய கடிதத்தில் கிள்ளியூர் பேரூராட்சிக்குட்பட்ட இலவுவிளை பகுதியில் திரு. தா டென்னிஸ், என்பவர் பெயரில் 4/80 கதவு எண் கொண்ட கிள்ளியூர் பேரூராட்சியின் வரி விதிப்பை திரு. தா. டைட்டஸ் பெயருக்கு மாற்றம் செய்யக்கோரி திரு. டைட்டஸ் என்பவரால் குழித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.O.S.No.163/2011–ன் தீர்ப்பாணையினை எதிர்த்து திரு.டென்னிஸ் என்பவரால் குழித்துறை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். A.S.59/2016 நடைபெற்று வருவதாகவும், தீர்ப்பின் தன்மையை பொறுத்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தனது விளக்க அறிக்கையில் தெரிவித்து திரு.டென்னிஸ் என்பவரின் கடிதம் மற்றும் வழக்கிற்கான ஆவண நகலுடன் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

எனவே மேற்படி முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள சொத்து சம்பந்தமாக அவரின் பிரதிவாதி தொடுத்துள்ள வழக்கின் தீர்ப்பின் தன்மையினை பொறுத்து செயல் அலுவலர், கிள்ளியூர் பேரூராட்சி அவர்கள் செயல்படுவதாக உறுதி பட தெரிவித்துள்ளார். 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)ன் படி நீதிமன்றமொன்றில் வழக்கு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்கு உட்படுத்த இயலாது. எனவே, மேற்படி நீதிமன்ற வழக்கின் தீர்ப்பின் தன்மையின்படி பேரூராட்சி செயல் அலுவலர், கிள்ளியூர் அவர்கள் செயலபட தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13/9/17

பெறுநர்

திரு. டி. டைட்டஸ்,
15/114, டிரினிடி ஹவுஸ்,
எட்டக்கோடு, வியனூர் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்–629 177.

நகல்

செயல் அலுவலர்,
கிள்ளியூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.